# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1654/9 - 2010 මැයි 19 වැනි බදාදා - 2010.05.19

*1654/9 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

64 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், கண்டி, கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையினால் பேணப்படுகின்ற தம்பவெலை, எல்ஹேனை, மாளிகாவத்தை, சரசவிகம, ஒகஸ்டாவத்தை, உடபோவளை, மஹகந்தை, ஹிந்தகலை மற்றும் உடபேராதனை ஆகிய பிரதேசங்களின் நீர் வழங்கல் நடவடிக்கைகள் தொடர்பாக அச்சட்டத்தின் 63 (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ அறுதி மாற்றல் உத்தேச திட்டத்தின் ஏற்பாடுகளை இக்கட்டளையின் மூலம் கீழே அட்டவணையில் உள்ளடக்குகின்றேன்.*

தினேஷ் குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 34, நாரஹேன்பிட்டி வீதி,
நாவல,
2010, மே 14.

#### அட்டவணை

61 (1) ஆம் பிரிவு - தன்னார்வ அறுதிமாற்றல் உத்தேச திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவை :-

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உடமையாக்கிக் கொள்ளல் வேண்டும் :-

(i) கண்டி, கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் கீழுள்ள தம்பவெலை, எல்ஹேனை, மாளிகாவத்தை, சரசவிகம, ஒகஸ்டாவத்தை, உடபோவளை, மஹகந்தை, ஹிந்தகலை மற்றும் உடபேராதனை ஆகிய பிரதேசங்களின் நீர் வழங்கல் திட்டத்திற்குட்பட்ட அனைத்து நீர் வழங்கல் சேவை நீர்த்தேக்கங்கள், நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், அமுக்கத் தாங்கிகள் மற்றும் பம்பி நிலையங்கள் ஆகியனவற்றைச் செயற்படுத்துவதற்கும், பேணுவதற்கும் தேவையான எல்லா காணி, கட்டடங்கள், நீர்க் குழாய்கள், எல்லாவித இயந்திரங்கள் மற்றும் மின்பொறிமுறைப் பொருத்துதல்களும், அப்பொறிமுறைகளைப் பேணுவதற்குத் தேவையான எல்லா வகையான உதிரிப் பாகங்கள், துண உபகரணங்கள், மற்றும் களஞ்சியசாலைப் பொருட்கள் ;

(ii) மேற்படி நீர் வழங்கல் திட்டங்களில் அமைந்துள்ள நீர் விநியோக முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான நீர்க்குழாய்களின் சேவக உரிமை, உதிரிப்பாகங்கள், துணை உபகரணங்கள் மற்றும் களஞ்சியசாலைப் பொருட்கள் உட்பட அனைத்துப் பிரதான நீர்க்குழாய் விநியோகத்திற்கான நீர்க்குழாய்கள்.

***அட்டவணை*** *(தொடர்ச்சி)*

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் சம்பந்தமான திட்டமிடல், வழங்கல், பொருத்துதல், நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணல் தொடர்பாக கண்டி, கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையுடன் இணக்கப்பாடு காணப்பட்ட எல்லாவிதமான ஒப்பந்தங்களும், சபையின் உரிமைகள், இணக்கப்பாடுகள், பொறுப்புக்கள் என்பனவும் சபையிடம் ஒப்படைக்கப்படும் ;

(இ) நீர்ப்பாவனை மற்றும் நீர் வழங்கல் சேவைகள் தொடர்பாக நீர் பாவனையாளர்களுடன் கண்டி, கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையுடன் இணக்கப்பாடு காணப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும், அச்சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக செய்யவேண்டிய கொடுப்பனவுகளும் சபையிடம் ஒப்படைக்கப்படும் ;

(ஈ) 34,11,900 ரூபா (முப்பத்திநான்கு இலட்சத்து பதினோராயிரத்து தொளாயிரம் ரூபா பெறுமதியான இந்த வசதிகளின் ஆதன உதவி அரசாங்கத்தினால் நன்கொடையாக சபைக்கு வழங்கப்படும் ;

(உ) நீர் வழங்கல் தொடர்பாக பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் சபையினால் தொடர்ந்தேச்சையாக பேணப்படுவதுடன் ஒப்பந்தம் நிறைவு செய்யப்படும்.

மேற்படி அறுதிமாற்றல் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

6- 24

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.